**ஆலங்குளம், அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்.முனைவர்.ஈ.ஷீலா, எம்,ஏ.,பி.எச்.டி.,**
**ந.க.எண். 1578/அ/2023 நாள்.18.09.2024**

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை — ஆலங்குளம், அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி - இளநிலை உதவியாளர் திருமதி.மு.இராதா என்பார் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டமை — பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 33, தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத் துறை நாள். 08.03.2023
2. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் ((மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண். 4261/பி2/2018, நாள். 18.05.2023
3. அருப்புக்கோட்டை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள் ந.க.எண். 65/அ/2023 நாள். 24.05.2023
4. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 37678/பி3/2023-4, நாள். 22.11.2023
5. அரசு கடித எண்.1535/ஜி2/2023-1, நாள். 30.10.2023
6. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 1658/பி1/2023 நாள். 06.12.2023

*****

சிவகங்கை, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி, விலங்கியல் துறை உதவிப்பேராசிரியராக பணியாற்றி பணியில் இருக்கும் காலத்தில் இயற்கை எய்திய முனைவர்.ப.பாலமுருகன் என்பாரின் (வாரிசுதாரர்) மனைவி திருமதி.மு.இராதா என்பாருக்கு பார்வை (2) ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி அருப்புக்கோட்டை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை (3) ல் காணும் அருப்புக்கோட்டை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரின் செயல்முறைகளின் அடிப்படையில் தனியர் 31.05.2023 முற்பகல் அக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பின்னர் இடப்பெயர்வு பெற்று, 07.12.2023 முற்பகல் முதல் இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறார்.

பார்வை (5) ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் பார்வை (1) ல் காணும் அரசாணையின் படி தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையில் பணிநியமனம்) விதி 2023 ன் விதி 16 ல் ஒவ்வொரு நியமன அதிகாரியும் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட நபரின் தகுதி பொருட்டு பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் அன்னாரின் பணிகளை முறைப்படுத்த வேண்டும் எனவும், மேற்காண் விதியின் அடிப்படையில் கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற பணியாளர்களது பணியினை வரன்முறை செய்வதற்கு விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் நியமன அலுவலர் அளவிலேயே பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை (1) ல் காணும் அரசாணையின் உள்ள விதி 16 ல் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் தனியருக்கு அன்னார் பணியில் சேர்ந்த நாளான 31.05.2023 முற்பகல் அன்று பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேற்காண் பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவக்காலத்தில் வைக்கப்படுவார் என்றும், இக்காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

18/9/24

முதல்வர்
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆலங்குளம்-627851.

பெறுநர் :
திருமதி.மு.இராதா
இளநிலை உதவியாளர்
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆலங்குளம்-627851.

18.09.2024

நகல் :

1. இவ்வலுவலக 'அ' பிரிவு
2. இருப்புக் கோப்பு
3. பணிப்பதிவேடு

**நகல் (தகவலின் பொருட்டு பணிந்தனுப்படுகிறது)**

1. கல்லூரிக் கல்வி இயக்குநர்
   கல்லூரிக் கல்வி இயக்ககம்,
   சைதாப்பேட்டை,
   சென்னை-15.

2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
   கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம்
   திருநெல்வேலி -8.